**தலைப்பு 254 – பதிவாளர் நாயகத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2018 டிசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 18 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10ம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக இல்லாமை

2018 நவம்பர் 21 ம் திகதி 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டியிருந்த போதிலும், அத்தேவைப்பாட்டிலிருந்து விலகிச் சென்றுள்ள சந்தர்ப்பம் ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 39,335,787 பெறுமதியான பொறுப்புக்கள் திறைசேரிக்கு அறிக்கையிடப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதி 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடன்பாடுகளும் பொறுப்புக்களும் திறைசேரியின் கூற்றுடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும். | எதிர்காலங்களில் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்துப் பொறுப்புக்களையும் பதிவு செய்வதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்படுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலுவை வருமானம் தொடர்பாக தலைமை காரியாலய அறிக்கைக்கும் காணிப்பதிவாளர் அலுவலகத்திற்குமிடையே ரூபா 7,131,786 ஆன | நிதிப்பிரமாணம் 175(2) இற்கு அமைவாக வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர் | நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் தனிப்பட்ட நிலுவைத் தாள்கள் என்பவற்றை |

| | | |
|---|---|---|
| வேறுபாடு காணப்பட்டதுடன், மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கைகள், நிலுவை வருமானம் தொடர்பான தனிப்பட்ட நிலுவைப் பதிவுகள் தயாரிக்காமையினால் நிலுவை வருமானம் சரியானதென உறுதிப்படுத்துவது இயலாத காரியமாகும். | தொழிற்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ஆ) தலைமைப்பதிவாளர் அலுவலகத்தினால் மீளாய்வாண்டின்போது வருமானம் சேகரிக்கும் வங்கிக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 3,355,634 ஆன தொகை இனங்காணப் பட்டிருக்காமையுடன், 9 அலுவலகங்களினால் வருமான அறிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நூற்றுக்கு 60 வீதமான தலைப்பு வருமானமாக ஒருங்கிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 15,643,917 தொகையை சரியாக பிரித்தறிவது கடினமாக இருந்தது. | தலைமைப் பதிவாளர் அலுவலகங்களின் வங்கி வைப்புச் சீட்டுக்களை வருமானப் பதிவுகளுடன் ஒப்பிடுவதன் மூலம் சரியான வருமானம் இனங்காணப்படல் வேண்டும். | 2019 ஆம் வருடத்திலிருந்து அனைத்து அறிக்கைகளையும் பெறுவதற்கான தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் பொருட்கணிப்பீடு பூர்த்தியாக்கப்படாமை, ஏனைய 3 அமைச்சுக்களின் கீழான ஒதுக்கங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்காமை, நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூற்றின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு சொத்துக்களின் ஆரம்ப நிலுவை, கொள்வனவுகள், இறுதி நிலுவை என்பவற்றில் காணப்பட்ட பெருமளவிலான வேறுபாடுகள் என்பன | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியானது, பொருட் கணிப்பீடுகள், நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு மற்றும் ஏ.சீ.ஏ-6 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூற்று என்பன மூலம் | தகவல்களைச் சரிபார்க்கும்போது அலுவலகங்களின் தவறுகள் காரணமாக ஏற்பட்ட பிழைகளினால் இந்நிபந்தனைகள் அறிக்கையிடப் பட்டதுடன், எதிர்காலத்தில் இவ்வாறு செயற்பட வேண்டாமென அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். |

| | | |
|---|---|---|
| காரணமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,182,960,444 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி சரிபார்க்கப்படவில்லை. | சரிபார்க்கப்பட வேண்டும். | |
| (ஆ) அரச கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற சொத்துப்பதிவேடுகளில் பதிவாளர் நாயகத்திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் உள்ளடக்கப்படாமையுடன், திணைக்களத்தின் சொத்துக்கள் அரசாங்க நிதிக்கூற்றுக்களிலும் காட்டப்படவில்லை. 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், கட்டிடங்கள், என்பன கொம்ப்ரோலர் ஜெனரல் இடத்தில் அறிக்கையிடப்படவில்லை | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பான சரியான தரவுகள் உள்ளடங்கிய கணக்குகள் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். | தேவையான திருத்தங்களை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு சம்பந்தமான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு சம்பந்தமான இணக்கக்கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் இடம் மாற்றலாகிச்சென்ற, மரணித்த, ஓய்வுப்பெற்றுச் சென்ற, வேலை இடைநிறுத்தப்பட்ட, சேவையிலிருந்து நீக்கப்பட்ட, சேவையை விட்டுச்சென்ற அல்லது இராஜினாமா செய்த 84 உத்தியோகத்தர்களின் 3 மாதங்கள் தொடக்கம் 28 வருடங்கள் வரையான காலவீச்சில் அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் நிலுவை ரூபா 2,939,823 ஆகும். | 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பந்திகள் 1 மற்றும் 3 இன் பிரகாரம் மற்றும் தாபனக்கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 4 ஆம் பிரிவின் பிரகாரம், அறவிடப்படவேண்டிய கடன் நிலுவைகள் தீர்க்கப்படல் வேண்டும். | ரூபா 10,000 இற்கு குறைவான கடன் நிலுவைகளை நீக்குவதற்கும் மற்றும் கடிதம் மூலமான அறிவித்தல்கள் மூலம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சில பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்ட முறையில் பேணப்படவில்லை என்பது மாதிரிக் கணக்காய்வுச் சோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை. | 1978 டிசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் காட்டப்பட்ட மாதிரிப்படிவம் II இற்கமைய நிலையான சொத்துப்பதிவேடு கணக்காய்வு தலைமை அதிபதியின் உடன்பாட்டுடன் பேணப்படல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவேண்டிய காணி, கட்டிடங்களை உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) பிணைப்பதிவேடு | | |
| பிணை வைக்க வேண்டிய தேவையுடைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல் அடங்கியதாக பிணைப்பதிவேடொன்று தயாரிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 880(i) இன் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய தேவையுடைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டதான பிணைப்பதிவேடொன்று பேணப்படுதல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய தேவையுடைய அலுவலர்களை இனங்கண்டு கொள்வதற்கான தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

### 1.6.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் செய்யப்படவேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதிக்கடப்பாடுகள் தொடர்பாக பயனுள்ள | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் | திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பான பயனுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நடைமுறையில் உள்ளதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படுவதுடன், அம்முறைமையின் பயன்பாட்டை மேற்பார்வை செய்வதற்கான காலரீதியான மீளாய்வுகளைச் செய்வதுடன் அதன்பிரகாரம் அம்முறைமையை பயனுள்ளதாக செயற்படத்தக்க வகையில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்தல் வேண்டும். அவ்வாறான மீளாய்வுகள் எழுத்துமூலமாகச் செய்யப்பட்டு அதன் ஒரு பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகளைச் செய்தமைக்கான கூற்றுக்கள் கண்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைத் தயாரித்து அவற்றை மீளாய்வு செய்வதற்கும், அதன்பிரகாரம் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் தேவையான மாற்றங்களை செய்வதுடன், எழுத்துமூலமாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதாகக் குறித்துக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வேண்டப்படும் வகையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்குமான விடைகள் அளிக்கப்படுவதைப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கான விடைகள் அளிக்கப்படவில்லை. | - மேற்படி - | எதிர்காலத்தில் மீளாய்வு காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் விடையளிக்கப்படுவதால் குறித்துக் கொள்ளப்பட்டது. |

**1.6.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பிரித்துக் காட்டப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நொத்தாரிசுச் சட்டம் | | | |
| (i) | 18(1) ஆம் பிரிவு | ஏழு மேல் நீதிமன்ற வலயங்களால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்கான நொத்தாரிசு கோப்பகங்கள் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டிய நொத்தாரிசு கோப்பகங்கள் கடந்தசில வருடங்களாக முறையாகப் பிரசுரிக்கப்படவில்லை. | நொத்தாரிசுச் சட்டத்தின் 18(1) ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திற்குட்பட்ட தொந்தாரிசுகளாக தொழிற்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து ஆட்களினதும் விபரங்கள் அடங்கிய கோப்பகம் ஒன்று பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். | அனைத்து மேல் நீதிமன்றங்களிலிருந்தும் நொத்தாரிசு கோப்பகங்களைப் பெற்று அக்கோப்பகத்தைப் பிரசுரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | 27(1) ஆம் பிரிவு | நொத்தாரிசாக தொழிற்படுவதற்கு மேல் நீதிமன்ற செயலாளரிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 08 அலுவலகங்களில் அனுமதிப்பத்திரம் பெறாத நொத்தாரிசுகளின் எண்ணிக்கை 221 ஆக இருந்தது. அவற்றுள் 10 நொத்தாரிசுகள் 2018 ஆம் வருடத்தில் 196 காணி உறுதிகளைப் பதிவு செய்துள்ளனர். | பிரிவு 27(1) இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் பெறாமல் உறுதிகளை எழுதும் நொத்தாரிசுகள் தொடர்பாக மேல் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு காணிப்பதிவாளர்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும். |
| (iii) | 31(26) ஆம் பிரிவு மற்றும் பதிவாளர் | உறுதி எழுதப்பட்ட மாதத்தின் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் | நொத்தாரிசுச்சட்டம் மற்றும் பதிவாளர் நாயகத்தின் | உறுதியின் இரண்டாவது பிரதிகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாயகத்தின் கைநூல் 374(1), (3) மற்றும் 375 ஆம் பிரிவு | திகதிக்கு முன்பாக குறிப்பிட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு உறுதியின் இரண்டாவது பிரதி அல்லது எழுதப்படாத வெற்று அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத நொத்தாரிசுகள் சம்பந்தமாக முறையற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எனினும் ஹொரண , களுத்துறை மற்றும் மத்துகம காணிப்பதிவாளர் அலுவலகங்கள் இதற்கேற்ப தொழிற்படாமல் இருந்த 3,566 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | கைநூலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். | நேரகாலத்துடன் பொறுப்பேற்பதற்கும் , மற்றும் காலதாமதங்கள் தொடர்பான முறையற்ற அறிக்கைகள் தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு காணிப் பதிவாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |
| (iv) | 35ஆம் பிரிவு மற்றும் பதிவாளர் நாயகத்தின் கைநூல் 15 மற்றும் 18 ஆம் பிரிவுகள் | இரு காணிப்பதிவாளர் அலுவலகங்களின் 34 நொத்தாரிசுகளிடமிருந்து 2009 – 2018 ஆம் காலப்பகுதிகளில் அறவிடப்படவேண்டிய கூட்டு நிலுவைத்தொகையான ரூபா 1,256,678 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நொத்தாரிசுச்சட்டம் மற்றும் பதிவாளர் நாயகத்தின் கைநூலின் பிரிவுகளுக்கு இணங்க கூட்டு நிலுவையானது அறவிடப்படவேண்டும். | அறவிடப்படவேண்டிய கூட்டு நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி குறிப்பிட்ட காணிப்பதிவாளர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். |
| (v) | 41(1) (அ), (ஆ) மற்றும் 18(2) ஆம் பிரிவுகள் மற்றும் பதிவாளர் நாயகத்தின் கைநூல் 33 மற்றும் 34 ஆம் பிரிவுகள் | இரு காணிப்பதிவாளர் அலுவலகங்களில் 06 இறந்துபோன நொத்தாரிசுகளால் எழுதப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகளின் மூன்றாவது பிரதிகளைப் பெறுவதற்கான அத்துடன் நொத்தாரிசு கோப்பகத்தில் 04 மரணித்த நொத்தாரிசுகளின் பெயர்களை நீக்குவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நொத்தாரிசுச்சட்டம் மற்றும் பதிவாளர் நாயகத்தின் கைநூலின் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். | மரணித்த நொத்தாரிசுகளால் எழுதப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட உறுதிகளின் மூன்றாவது பிரதிகளை பெறுவதற்கும், நடவடிக்கை எடுக்குமாறு காணிப்பதிவாளர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஆவணங்களைப் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் 117 ஆவது அதிகாரம் | | | |
| | 5 ஆம் பிரிவு மற்றும் பதிவாளர் நாயகத்தின் கைநூல் 548 ஆம் பிரிவு | ஹொரண காணிப்பதிவாளர் அலுவலகத்தில் 2010 – 2017 காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 114,321 உறுதிகளின் இரண்டாவது பிரதிகள் 2018 திசெம்பர் வரையில் தொகுதியில் (Volume) பதியப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 150,000 க்கும் அதிகமான சிதைவடைந்த உறுதிகளின் இரண்டாவது பிரதிகள் சம்பந்தமாக பதிவாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படவில்லை | ஆவணங்கள் பதிவுச்சட்டம் மற்றும் பதிவாளர் நாயகத்தின் கைநூல் என்பவற்றின் பிரகாரம் பதிவாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் உறுதிகளின் இரண்டாவது பிரதிகள் மற்றும் சகல அனைத்து ஆவணங்களும் இலகுவான அளவிலான தொகுதிகளில் கட்டப்படவேண்டியதுடன், பாதுகாப்பாக பேணப்பட வேண்டும். | ஒப்படைக்கப்படுகின்ற உறுதிகளின் இரண்டாவது பிரதிகளைத் தொகுதிகளில் பதியப்பட்டு பூரணப்படுத்துவதற்கும் மற்றும் சிதைந்த இரண்டாவது பிரதிகள் சம்பந்தமான பதிவுகளை அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு காணிப் பதிவாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |
| (இ) | பதிவாளர் நாயகத்தின் கைநூல் | | | |
| | 440(2) ஆம் பிரிவு | காணிப் பதிவாளர் அலுவலகமொன்றின் உறுதிகளுக்கு குறைந்தளவு முத்திரை பயன்படுத்தப்பட்டமையால் 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான அறவிடப்படாது இருக்கின்ற நிலுவை மற்றும் தண்டப்பணம் ரூபா 3,599,555 ஆன தொகை அறவிடப்படாமையுடன் மாகாண சபை இறைவரி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்படவில்லை. | பதிவாளர் நாயகத்தின் கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிலுவை மற்றும் தண்டப்பணம் சம்பந்தமான அறிக்கைகளை மாகாண சபை இறைவரி ஆணையாளருக்கு காணிப் பதிவாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் எதிர்வுகூறப்பட்ட பதிவுக்கட்டணம் மற்றும் நொத்தாரிசு கட்டணம் என்பன முறையே ரூபா 1,100 மில்லியன் மற்றும் ரூபா 15 மில்லியனாக இருந்தன. இருந்தபோதிலும் திறைசேரியினால் பதிவுக்கட்டண வருமானம் ரூபா 1,500 மில்லியனாக எதிர்வுகூறப்பட்டு வருடாந்த மதிப்பீட்டில் உள்ளக்கப்பட்டிருந்தது. மீள்திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் உள்ளபடியான வருமான சேகரிப்பு முறையே ரூபா 1,403 மில்லியன் மற்றும் ரூபா 19.4 மில்லியனாகவும் இருந்தன. | நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருமான மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படவேண்டும். மற்றும் தேவைப்படுமிடத்து திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதுடன் அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான நிர்வாகத்தை மிகவும் செயற்திறன் மிக்கதாக செய்வதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | வருமான மதிப்பீட்டை சரியான வகையில் சமர்ப்பிப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 27.22 மில்லியனில் வருடத்திற்குரிய அறவீடுகள் ரூபா 6.29 மில்லியன் மட்டுமான தொகை என்பதுடன் அது நூற்றுக்கு 23 வீதமாகும். | நிலுவை வருமானம் தொடர்பில் தனிப்பட்ட மீதிகளுக்குமான பதிவேடுகள் தயாரித்தல், காலப்பகுப்பாய்வு மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுதல் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை வருமானம் சம்பந்தமான காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் தனிப்பட்ட மீதிகளுக்கான பதிவேடு என்பவற்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வாகனப் பராமரிப்பு செலவு விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றப்பட்ட ரூபா 400,000 தொகையான மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். | வாகனமொன்றின் திருத்தவேலைகள் வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்படாமையினால் கொடுப்பனவுகளை செய்வதற்கு முடியாமல் போயிற்று. |
| (ஆ) நான்கு மூலதனச்செலவு விடயங்களுக்கான தேறிய ஒதுக்கீடான ரூபா 29.59 மில்லியன் தொகையில் ரூபா 20.20 மில்லியன் பயன்படுத்தப்பட்டமையுடன் சேமிப்புகளானது தேறிய ஒதுக்கங்களின் நூற்றுக்கு 21 தொடக்கம் 80 வீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது. மேலும் 06 மீண்டெழும் செலவு விடயங்களுக்கான ரூபா 20.30 மில்லியன் தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 3.0 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச்செலவின விடயங்களுக்கான சேமிப்பானது நூற்றுக்கு 11 தொடக்கம் நூற்றுக்கு 60 வீதமான வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | ஒதுக்கங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தும் திருத்த வேலைகள் செய்யாமை, கட்டு நிதி கிடைக்காமை, சிட்டைகள் சமர்ப்பிக்கப்படாமை என்பன இதற்கான பிரதான காரணங்களாகும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 29 ஆம் திகதி 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரிவு 02(அ) இற்கு முரணாக 13 செலவு விடயங்கள் | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கிணங்கி நடப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட ரூபா 293.83 மில்லியன் தேறிய ஒதுக்கத்தினை விட மேலதிகமாக ரூபா 36.50 மில்லியன் பொறுப்புக்களுக்கு உடன்பட்டு இருந்தமை. | நடவடிக்கை எடுக்கவேண்டும். | எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான 10 செலவு விடயங்களின் கீழ் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 6.47 மில்லியன் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்தவேண்டிய செலவுகள் சம்பந்தமான பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு, நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்படுவதுடன், திறைசேரிக்கு அறிக்கையிடல் வேண்டும். | கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தின்போது பெறப்பட்டிருந்த சகல பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17ம் திகதி 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) | E-title செயற்திட்டத்தின்கீழ் 27 உரிமங்களைப் பதிவுசெய்யும் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட உரிமம் சான்றிதழ்களைப் பதிவுசெய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான வேலைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டின்போது இந்நோக்கத்திற்காக | திறைசேரியினால் வழங்கப்படும் ஏற்பாடுகளுக்கான பிரதான தொழிற்பாடுகள் பௌதீக மற்றும் நிதி இலக்குகளுடன் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | பதிவு செய்தல் தொழிற்பாடானது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் வேறாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| காணியமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 30.10 மில்லியன் ஏற்பாடுகளில் ரூபா 23.46 மில்லியன் ஆன தொகை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 8 தொழிற்பாடுகள் சம்பந்தமாக பௌதீக மற்றும் நிதி இலக்குகள் செயலாற்றுகை அறிக்கையில் 11 தொழிற்பாடுகள் சம்பந்தமான உள்ளபடியான பௌதீக மற்றும் நிதி பொறுப்புக்கள் காட்டப்படாமையினால் அத்தொழிற்பாடுகள் தொடர்பாக செயலாற்றுகை மட்டத்தை உறுதிசெய்ய முடியாமல் இருந்தது. | திறைசேரியினால் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளுக்கான பிரதான தொழிற்பாடுள் பௌதீக மற்றும் நிதி இலக்குகளுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதுடன் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்கள், செயலாற்றுகை அறிக்கையில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. |

## 3.2 எதிர்பார்த்த விளைவு மட்டத்தினை எட்டாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டிலிருந்து பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் தொடர்பான ஈ-சனத்தொகை பதிவுசெய்தல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 2012 யூலை தொடக்கம் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற 2,385,232 பிறப்புக்களில் 1,533,568 பிறப்புக்கள் மற்றும் 918,644 இறப்புக்களில் 543,131 இறப்புக்கள் தகவல் முறைமைகளின் கீழ் உள்ளடக்கப்படவில்லை. | அபிவிருத்தி செய்யவேண்டிய அம்சங்களை இணங்கண்டு முறையான திட்டமிடலின் பிரகாரம் தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கிக்கொள்வதுடன் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையும் பொருட்டு செயற்திறனுடன் தொழிற்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தரவுகளைப் பதிவுசெய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | இச்செயற்திட்டத்திற்காக 2016 மற்றும் 2017 வருடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 72.02 மில்லியனில் ரூபா 71.09 மில்லியன் அல்லது நூற்றுக்கு 98.7 சதவீதம் பயன்படுத்தப்படாமையுடன் மீளாய்வாண்டின்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | 1960 ஆம் ஆண்டிற்கு பின்னர் இடம்பெற்ற பிறப்புக்கள், விவாகம் மற்றும் இறப்புச்சான்றிதழ்களை ஸ்கேன் செய்து ஈ - பிறப்புச் சான்றிதழ்களை வழங்குதல், விவாகம் மற்றும் இறப்பு செயற்திட்டங்களை எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும் 2014 ஆம் வருடம் தொடக்கம் 2018 மே மாதம் வரையான காலப்பகுதிக்கான 3,423,590 சான்றிதழ்கள் ஸ்கேன் செய்யப்பட்டு தரவுப்புத்தகத்தில் பதியப்படவில்லை. இச்செயற்திட்டத்திற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 260 மில்லியன் ஏற்பாட்டில் ரூபா 250.56 மில்லியன் அல்லது நூற்றுக்கு 96 சதவீதம் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் 2018 ஆம் வருடத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களின் ஏற்பாடு பயன்படுத்தப் படாமையினால் ஏற்பட்ட நிலைமை நாளது வரையாக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கான ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | உரிமங்களை பதிவுசெய்யும் அலுவலகங்களினால் மீளாய்வாண்டின்போது பதிவுசெய்யப்பட்ட 53,004 உரிமத் தீர்மானங்களில் 48,014 உரிமத் தீர்மானங்கள் முந்திய வருடத்திற்காகப் பெறப்பட்ட உரிமத்தீர்மானங்களாக இருந்ததுடன், மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட 55,904 | உரிமங்களைப் பதிவுசெய்வதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து, தேவையான தீர்வுகளைப் பயன்படுத்தி நடவடிக்கைகள் செயற்திறனுள்ளவையாக இருத்தல் | பதிவுசெய்யப்பட்ட உரிமங்கள் முந்திய வருடங்களுக்கு உரியவையா என்பதை நியாயப்படுத்துவதற்கான பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | உரிமத்தீர்மானங்களில் 50,914 அல்லது நூற்றுக்கு 91 சதவீதம் ஆண்டிறுதி வரையில் பதிவுசெய்யப்படுவதற்கு முடியாமல் இருந்தது. | வேண்டும். | |
| (ஈ) | அங்கீகாரம் பெற்ற நபர்களுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை வழங்குதல், அட்டோர்னி இரண்டாவது பிரதிகளைப் பரீட்சித்தல், உறுதிகளின் இரண்டாவது பிரதிகளைப் பரீட்சித்தல் மற்றும் அட்டோர்னி ஆவணப் பிரதிகளின் வழங்குதல் போன்ற 4 தொழிற்பாடுகளுக்குமான பௌதீக இலக்குகள் அடையப்படாமை முறையே நூற்றுக்கு 46, 50, 98 மற்றும் 99 சதவீதங்கள் ஆகும். | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் செயலாற்றல் முறையாகச் செய்யப்படாமையினால் இந்நிலைமை அறிக்கையிடப்பட்டது. |
| (உ) | ஈ-லேன்ட் செயற்திட்டத்தின் கீழ் டிஜிட்டல் முறைமையில் காணிப் பதிவாளர் அலுவலகங்களின் சகல பிரித்தெடுத்தல் மற்றும் உறுதிகளின் பிரதிகள் ஸ்கேன் செய்யப்படுவதற்கும் மற்றும் பிரதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், உறுதிகளின் பிரதிகள் ஸ்கேன் செய்யப்படாடையுடன், ஸ்கேன் பண்ணப்படாத உறுதிகளின் எண்ணிக்கை அண்ணளவாக 25 மில்லியன் ஆக இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இவ்வருடம் யூலை முதல் 20 அலுவலகங்களில் ஸ்கேன் செய்யப்பட்ட பிரித்தெடுத்தல்கள் ஊடாகப் பிரதிகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், உறுதிகளின் இரண்டாவது பிரதிகளை ஸ்கேன் பண்ணுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 ஆம் வருட அரச பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் மற்றும் வழிகாட்டியின் 4.2.2 இன் பிரகாரம் பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் அதற்கு இணங்கியதாக இருக்கவில்லை. | வழிகாட்டியின் பிரமாணங்களின் பிரகாரம் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட பெறுகைகளை அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தல் வேண்டும். | 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுவதற்கும், குறிப்பிடப்பட்ட பெறுகைகளை செயற்படுத்துவதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) திணைக்களத்தின் பாதுகாப்புச்சேவை மற்றும் தூய்மைப்படுத்தும் சேவைகளை வழங்குதல் தொடர்பான பெறுகைகளின்போது 2006 இன் அரச பெறுகை வழிகாட்டியின் 5.3.13 மற்றும் 6.2.2 வழிகாட்டல்களுக்கு முரணாக ரூபா 600,000 .ற்கும் குறைவான தொகை மனுப்பாதுகாப்பு உத்தரவாதமாக எடுக்கப்பட்டிருந்ததுடன், பெறுகை தொடர்பாக 2017 மார்ச் 15 ஆம் திகதிய துணைநூல் இல.33 இன் பிரகாரம் முழுக்கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டியின் பிரகாரம் மனுப்பாதுகாப்பு உத்தரவாதம் பெறப்படுவதுடன் பெறுகை வழிகாட்டியின் துணைநூலின் பிரகாரம் முழுக்கிரய மதிப்பீட்டைத் தயாரிப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது. |

### 3.4. சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துப்பதிவேட்டில் | காணிகள் மற்றும் கட்டிடங்களின் | சொத்துக்களின் உரிமைகளை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டுள்ள 15 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கும், திணைக்களத்தின் 09 காணி மற்றும் கட்டிடங்களுக்கான பெறுமதியை கணிப்பிட்டு அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும், கணக்குகளிலும் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், மற்றும் நிலையான சொத்துபதிவேடுகளிலும் குறிப்பிட்ட கணக்குகளிலும் காட்டப்படுவதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | பெற்றுக் கொள்வதற்கும், அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் எடுப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திணைக்களத்தின் 11 காணி பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்கள் பல வருடங்களாக வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடங்களில் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதுடன், மீளாய்வாண்டிற்கான வாடகையாக ரூபா 16.44 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | அரச அலுவலக இடங்களில் பகுதிகளை ஒதுக்குவதற்கும், அல்லது சொத்துக்களை பெறுவதற்குமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | அரச கட்டிங்களின் பற்றாக்குறைக காரணமாக இவ்அலுவலகங்கள் வாடகை கட்டிடங்களில் பராமரிக்கப்பட வேண்டி உள்ளமை. |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவு பிரிவுகள் 14 இல் 2019 ஜனவரி மாதத்தின்போது 04 மாதங்கள் தொடக்கம் 3 வருடங்கள் வரையான காலப்பகுதியில் பதிவாளர் பதவிக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | நியமனங்களை வழங்கி பதிவாளர் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் பொதுச்சேவையை முறையாக செயற்படுத்தப்படல் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**4. நிரந்தர அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்ளுதல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2030" இற்கு இணங்கியதாக பாராளுமன்றத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட 2017 இன் 19 ஆம் இலக்க ஸ்ரீலங்கா நிலைபேறான அபிவிருத்திச்சட்டம் மற்றும் அரசினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனினும் திணைக்களம் அது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. இலக்குகள் மற்றும் நோக்கங்களை இனங்கண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதுடன், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளங்கண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கும், அவ் இலக்குகளை அடைவதற்கும் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படும். |

**5. நல்லாளுகை**

**5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மீளாய்வு செய்வதன் மூலம் குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2016 சனவரி 28 ஆம் திகதி DMA/2019(1)(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் | திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவால் கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கைகள் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை 2019 ஆம் ஆண்டிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயற்படுத்துவதாக குறித்துக்கொள்ளப்பட்டது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பதவி வெற்றிடங்கள் 216 ஆக இருந்ததுடன் அவற்றில் 23 சிரேஷ்ட மட்டத்திற்குரிய பதவிகளாகும். இப்பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடங்களாக இருப்பதுடன் அது நூற்றுக்கு 56 சதவீதம் ஆகும். | வெற்றிடங்களாகக் காணப்படுகின்ற பதவிகளை நிரப்புவதன் மூலம் திணைக்களத்தின் நடவடிக்கைகளை செயற்திறன் மிக்கவையாக செய்தல் வேண்டும். | திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பதவியான உதவிப் பதிவாளர் நாயகத்திற்கான பதவியை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் நிரப்புவதற்கான ஆரம்பப்படிகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலகரான பதிவாளர் நாயகம் பதவிக்காக நிலையான அலுவலகர் ஒருவர் நியமிக்கப்படாது 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் ஈடுசெய்யும் மற்றும் பதில் அடிப்படையிலேயே கடமைகள் செய்யப்பட்டு வருகின்றன. | வெற்றிடங்களாகக் காணப்படுகின்ற பதவிகளை நிரப்புவதன் மூலம் திணைக்களத்தின் நடவடிக்கைகளை செயற்றிறன் மிக்கதாகச் செய்தல் வேண்டும். | அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய பதிவாளர் நாயகம் பதவியானது 2017 ஆம் ஆண்டிலிருந்து கடமைகளை ஈடுசெய்யும் மற்றும் பதில் அடிப்படையிலே செய்யப்பட்டு வருகிறது. |